# வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., செப்டம்பரில் சோதனை ஓட்டம்



– நமது நிருபர் –

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் – வண்ணாரப்பேட்டை இடையே, செப்டம்பரில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்பட உள்ளது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, கோயம்பேடு வழியாக சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, சின்னமலை வழியாக, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் பாதை பணி நடந்தது வருகிறது.

இப்பாதை பணி முடிந்து, இந்நிலையங்கள் இடையே ரயில் போக்குவரத்து நீட்டிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம், எஞ்சியுள்ள கட்டுமான பணிகளை துரிதப்படுத்தி உள்ளது.

தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை நிலையங்களுக்கு இடையே, ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி நிலையங்கள் உள்ளன.

இந் நிலையங்கள் இடையே, சுரங்கப்பாதை அமைக்கும் பணி, நான்கு மாதங்களுக்கு முன் முடிக்கப்பட்டு, தண்டவாளம் அமைத்தல், நிலையங்கள் கட்டுமானம் உட்பட, உட்கட்டமைப்பு பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

இப்பணிகளில், தண்டவாளம் மற்றும் சிக்னல்கள் அமைக்கும் பணி, இம்மாதத்துடன் முடிந்து, வரும், செப்டம்பரில் இருந்து, தேனாம்பேட்டை டி.எம். எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் சோதனைஓட்டம் நடத்தப்பட உள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் அதிகாரி கூறியதாவது:

தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே ரயில் போக்குவரத்து, டிசம்பரில் துவங்க ஆர்வமாக உள்ளோம்.

இந் நிலையங்கள் இடையே, ரயில் சோதனை ஓட்டம், செப்டம்பரில் துவங்கி, மூன்று மாதங்கள் நடத்தப்படும். இதன் பின், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், இப்பாதையில் விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்துவார்.

அவர், பயணியர் ரயில் இயக்க பாதுகாப்பு சான்றிதழ் வழங்கியதும், ரயில் போக்குவரத்து,டிசம்பரில் துவங்க ஏற்பாடு உள்ளது.

இப்பாதையில், சென்ட்ரல் நிலைய கட்டுமான பணி முன்பே முடிந்துவிட்டது. மற்ற நிலையங்கள் கட்டுமான பணிகள், சுரங்கப்பகுதியில் முடிந்து, தரைக்கு மேற்பகுதியில் மட்டும், 10 சதவீதம் பாக்கியுள்ளது.

இக்கட்டுமான பணிகள், இரண்டு மாதங்களுக்குள் முழுவதும் முடிந்துவிடும். இந்நிலையங்கள் இடையே, எந்த தேதியில் இருந்து, ரயில் சோதனை ஓட்டம் நடத்துவது என்பது குறித்து, இன்னும் முடிவு செய்யவில்லை. தேதி முடிவு செய்ததும், முறையாக அறிவிக்கப்படும்.

இவ்வாறு அதிகாரி கூறினார்.